மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஊட்டச் சத்துணவுத் திட்டம், முதன் முதலில் 1962-63-ம் ஆண்டில் ஆரணி (வட ஆர்க்காடு மாவட்டம்), பவானிசாகர் (கோயம்புத்தூர் மாவட்டம்), கிருஷ்ணகிரி (தருமபுரி மாவட்டம்), கோவில்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்), பட்டுக்கோட்டை, திருவிடைமருதூர் (தஞ்சாவூர் மாவட்டம்), தெ. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் கொண்டுவரப்பட்டது. பின்னர் 1966-67-ம் ஆண்டில் இத்திட்டம் ஆத்தூர்-1, பூவிருந்தவல்லி ஆகிய வளர்ச்சி வட்டாரங்களுக்கும், 1967-68-ம் ஆண்டில் சாத்தூர், அகஸ்தீஸ்வரம், பெரியநாயக்கன் பாளையம் ஆகிய வளர்ச்சி வட்டாரங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

(உ) விவரங்கள் கொண்ட தனிக்குறிப்பு* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, will the Hon. Minister for Local Administration be pleased to extend the scheme to the Dharmapuri district also ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அத்தகைய தகவல்கள் இப்பொழுது எதுவுமில்லை.

வேதாரண்யத்தை அடுத்துள்ள தோப்புத்துறை துறைமுகம்.

* 322 **விஞ—திரு. ந. தருமலிங்கம்** : மாண்புமிகு தொழிலாளர்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த தோப்புத்துறை துறைமுகத்தை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அவ்விதமான செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

ஆசிரியர்களுக்கு வீடுகள்

* 323 **விஞ—திரு. கரு. சிமைச்சாமி** : மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை போன்ற பெரிய நகரங்களில் ஆசிரியர்களுக்கென தமிழ் நாட்டு வீட்டு வசதி யூனிட் மூலம் வாடகைக்கு விடும் திட்டத்தின் கீழ் அல்லது தவணை முறையில் செலுத்தும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றுல் எப்போது முதல் அமல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) இவ்விஞ எழவில்லை.

திரு. கரு. சிமைச்சாமி : சார், மதுரை போன்ற பெரிய நகரங்களில் ஆசிரியர்களுக்கு ஒரு வசதி செய்து கொடுக்கும் முறையில் இனிமேலாவது இம்மாதிரியான ஒரு திட்டத்தை பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஹவுஸிங் யூனிட்டில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு 10 சதவிதம் வாடகை வீதத்தில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. அது மாத்திரமல்லாமல் 500 ரூபாய்க்கு

* 618—622-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.